வகையில் உடல் பயிற்சிச் சாதனங்கள் அமைத்துத் தந்து மாண வர்களும் மற்றவர்களும் மாலை நேரங்களில் அங்கு பயிற்சி செய்ய வழிவகை செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலை வர் அவர்களே, அப்படிப்பட்ட வசதிகளைப் பெருக்குவதற்கான முயற்சியை விளையாட்டுத் துறை கவனத்தில் எடுத்துக்கொள்ளும்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளச்சேரிக்கு அருகிலே குதிரைப் பந்தய மை தானம் இருக்கிறது. பல நூறு ஏக்கர் நிலங்கள் சும்மாக் கிடக் கிறது, அது ஒரு பெரிய மைதானமாக இருப்பதாலும், கட்டட வசதி இருப்பதாலும், அடுத்த ஆசிய விளையாட்டுப் போட்டியை அல்லது ஒலிம்பிக் போட்டியை அந்த இடத்தில் நடத்துவதற்கு அரசு முயற்சியை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அப்படிப்பட்ட யோசனை இல்லை.

திரு. தி. அன்பழகன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் ஒவ்வொரு ஒன்றியத்திலும் உயர்நிலைப் பள்ளி அல் லது மேல்நிலைப் பள்ளியில் ஒரு விளையாட்டு அரங்கம் அமைக் கும் திட்டம் அல்லது செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா? நடப்பாண்டில் அது செயல்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலை வர் அவர்களே, விளையாட்டு அரங்குகள் அமைப்பது என்ற ஒரு கருத்து அரசின் பரிசீலனையில் இருந்து விளையாட்டுத் துறை மூலம் சில இடங்களில் முயற்சிகள் மேற்கொண்டு வரு கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஆரம்பிக்கிற அளவிற்கு இப்போது நாம் தேவையை உருவாக்கவில்லை. முதலில் தேவையை உரு வாக்கிவிட்டு பிறகு அதைப்பற்றி நாம் பேசலாம்.

முற்பகல் 9-30

இலக்குமிபுரம் கலை விஞ்ஞானக் கல்லூரி.

766—(வினா எண். 8984) திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம், இலக்குமிபுரம் கலை விஞ்ஞானக் கல்லூரியை அரசு ஏற்று நடத்தும் செயற்குறிப்புள்ளதா?

(ஆ) ஆம் எனில் அது பற்றிய விபரம் என்ன?

1986 மே 13]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ) நெய்யூர் இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மேலாண்மையில் உட்பூசல் ஏற்பட்டதையொட்டி, 4-2-75 முதல் இக்கல்லூரி மேலாண்மையை அரசு எடுத்துள்ளது. இக்கல்லூரி மேலாண்மையை கல்வி நிறுவனத்திற்கு ஒப்படைக்க வேண்டாமென அரசு முடிவெடுத்துள்ளது. தக்க மறு நடவடிக்கைக்காக இம்முடிவு கல்லூரிக் கல்வி இயக்குநருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் உள்ள நெய்யூர் இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தனிப்பட்ட ஒருவரால் உருவாக்கப்பட்டதல்ல. 1964-65-ல் பல பங்குதாரர்களால் கூட்டுறவு சங்கச் சட்டத்தில் கீழ் பதிவு செய்யப்பட்டு ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிகிறது. தற்போது அரசாங்கத்தின் மேற்பார்வையில் செயல்பட்டு வருகிறது. ஏற்கலவே கல்லூரி வளர்ச்சிக்காக பல்கலைக் கழக மானியக் குழு 1982-83-ல் இரு ஆணைகள் மூலமாக ஏறத்தாழ 6 இலட்சம் ரூபாய் வழங்க ஒப்புதல் அளித்தும் வழங்கப்படவில்லை. இப்படி பல பிரச்சனைகளை மனதிலே கொண்டு, அங்கே நியமிக்கப்பட்டுள்ள முதல்வர் ஓய்வு பெறும் நிலையில் இருப்பதாலும், கல்லூரியின் வளர்ச்சியை மனதிலே கொண்டு மாணவர்களைச் சேர்க்கவேண்டுமென்ற உணர்வோடு செயல்படவில்லை என்ற கருத்துக்கள் இருந்து வருகிறது. எனவே, இப்படிப்பட்ட நிலை அங்கே இருப்பதை மனதிலே கொண்டு, அந்தக்கல்லூரி கூட்டுறவு சங்க சட்டத்தின்கீழ் பதிவு செய்திருப்பதை அகற்றி, அரசாங்கமே அதன் நிர்வாகத்தை ஏற்று, நெய்யூர் இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அரசு கல்லூரியாக மாற்றியமைக்கப்படுமா என்பதை அமைச்சர் மூலமாக இந்த நேரத்தில் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இதற்கான நடவடிக்கைகள் இப்போது எடுத்து வருகிறோம்.

திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் என் தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தில் இன்றைக்கு செயல்பட்டு வருகின்ற நெய்யூர் இலக்குமிபுரம் கலை மற்றும அறிவியல் கல்லூரி அரசாங்கத்தின் மேற்பார்வையில் செயல்பட்ட போது, 75 விழுக்காடு பங்குதாரர்கள, அக்கல்லூரி அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்கிற காலத்தில், அரசு செலவழித்த பணத்தை வட்டியுடன் திருப்பிக் கொடுக்கின்ற முறையில் எழுத்து மூலம் உறுதியை அளித்துள்ளார்கள். இவைகளை மனதிலே கொள்ளவேண்டும். இன்றைக்கு அக்கல்லூரியின் கட்டிடங்கள் என்றைக்கு இடிந்து விழுமோ என்ற அபாயகரமான நிலையில்

இருப்பதால், அந்தக் கட்டிடங்களைப் பழுதுபார்ப்பதற்கும், புதிய கட்டிடத்தைக் கட்டுவதற்கும் ஏற்பாடு செய்வதோடு, மேலும் அங்கே மேஜை, நாற்காலி போன்றவை இல்லாத சூழ் நிலை இருப்பதால் அவைகளை வாங்கிப் போடுவதற்கும், நிர் வாகத்திற்குச் சொந்தமான அந்த வைப்புத் தொகையை எடுத்து செலவழிக்கும் முறை இருக்கிறது. அன்றைக்கு 1000 மாணவர்கள் படித்த அந்தக் கல்லூரியில் இன்றைக்கு 500-க் கும் குறைவாக படித்து வருகின்ற ஒரு மோசமான நிலைமை இருக்கிறது. ஆகவே, அந்தக் கல்லூரியைக் காப்பாற்ற அதற் கான கட்டிடத்தைக் கட்டுவதற்கும், மேஜை நாற்காலி வாங் கிப் போடுவதற்குமான நல்ல சூழ்நிலையை அரசாங்கம் உரு வாக்குமா என்று அமைச்சர் அவர்கள் மூலமாக தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்பமிகு தலை வர் அவர்களே, அதுபற்றி அரசு ஆலோசித்து தக்க நட வடிக்கை எடுக்கும்.

இருபது அம்சத் திட்டம்.

757* (வினா எண். 5285) திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கடந்த மூன்று ஆண்டுகளாக 20 அம்சத் திட்டத்தை அமு லாக்குவதில் தமிழக அரசு எந்தெந்த திட்டங்களை அரசு நிர் ணயித்த குறியிளவை விட அதிகமாக நிறைவேற்றியுள்ளது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அவை முன் விவர அறிக்கை ** ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, இருபது அம்சத் திட்டத்தை நாம் வெற்றிகர மாக நமது மாநிலத்தில் செயல்படுத்தி வருகிறோம். மத்திய அரசு நமக்கு அதற்காக விசேஷ நிதி உதவியை அளிக்கிறதா? விசேஷ நிதி உதவி அளிக்கவேண்டும் என வற்புறுத்தப்படுமா? மேலும், இந்தியாவிற்கே ஒரு வழிகாட்டியாக நமது மாநிலத்தில் தான் இந்த 20 அம்சத் திட்டத்தை சிறப்பாக செய்து வரு கிறோம். சட்டசபையிலேயே எல்லாக் கட்சிகளும் சேர்ந்து ஏகமனதாக ஒரு தீர்மானம் கொண்டு வந்து பாரத பிரதமர் திரு. ராஜீவ் காந்தியிடம் இந்த மாநிலத்திற்கு ஒரு சிறப்ப அந்தஸ்து கொடுக்கிற அளவில் ஒரு சிறப்பு பரிசு கொடுக் கிற அளவில் ஏற்பாடு செய்தால் மற்ற மாநிலங்களில் உள்ளவர்

** 242 பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.